## மஞ்சள் காமாலைக்கு நாட்டு மருந்தால் தீர்வு ஏற்படாது

# கே.எம்.சி.எச்-ல் நவீன சிகிச்சை டாக்டர் அரவிந்த் கூறும் விளக்கம்

கோவை, செப்.14: மஞ்சள் காமாலை, உடலில் நம் ரத்தத்தில் பிலிரூபின் என்னும் பொருளின் அளவு அதிகமாவதால் வெளிப்படுகிறது. ரத்தத்தில் உள்ள சிவப்பணுக்கள் இறந்த பின் பிலிரூபின் உருவாகிறது. இதை கல்லீரல், பித்தம் மூலமாக பித்தக்குழாய் வழியாக குடலுக்குள் செலுத்துகிறது. ஆகவே, மஞ்சள் காமாலை கல்லீரலை பாதிக்கும் நோய்களாலும், பித்தக் குழாய் அடைப்பாலும் உருவாகலாம். மஞ்சள் காமாலையை முற்றிலும் குணப்படுத்தவும், அதை கட்டுப்படுத்துவது குறித்தும் கோவை மெடிக்கல் சென்டர் இரைப்பை, குடல், கல்லீரல், கணையம் சார்ந்த சிறப்பு மருத்துவ சிகிச்சை மற்றும் எண்டோஸ்கோபி நிபுணர் டாக்டர் எஸ். அரவிந்த் கூறியதாவது:

மஞ்சள் காமாலைக்கு மிக முக்கியமான காரணம் வைரல் ஹெப்படைடிஸ். ஹெப்படைடிஸ் கிருமிகளில் பி மற்றும் சி வகையான கிருமிகள் மிகவும் அபாயகரமானது. ஏனெனில் இவை கல்லீரலில் நீண்ட நாள் தங்கி கல்லீரலை சுருக்கி, செயலிழக்க செய்கிறது. மேலும் கல்லீரலில் புற்றநோய் உருவாகவும் காரணமாகிறது.

அதிகமாக மது அருந்தும் பழக்கத்தினாலும் மஞ்சள் காமாலை மற்றும் கல்லீரல் சுருக்கம் ஏற்படும். பித்தக்கற்களாலோ, புற்றுநோய் கட்டியினாலோ ஏற்படும் பித்தக் குழாய் அடைப்பினால் மஞ்சள்காமாலை உருவாகலாம்.

அறிகுறி: மஞ்சள் காமாலையால் பாதித்தவர்களின் கண்கள் மஞ்சளாக இருக்கும். சிறுநீர் மஞ்சளாக காணப்படும். மேலும் உடல் சோர்வு, வயிற்று வலி, தோல் அரிப்பு, உடல் எடை வெகுவாக குறையும்.

சிகிச்சை முறை: மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக மருத்துவரை அணுகி தக்க ரத்தப்பரிசோதனை மற்றும் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் செய்து மஞ்சள் காமாலைக்கான காரணத்தை கண்டறிந்து ஏற்ற சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.



டாக்டர் அரவிந்த்

ஹெப்படைடிஸ் பி மற்றும் சி கிருமிகளை ஊசி மற்றும் மாத்திரை மூலமாக குணப்படுத்த வாய்ப்புள்ளது. மேலும் ஹெப்படைடிஸ் ஏ மற்றும் பி கிருமிகளுக்கு தடுப்பூசிகள் உள்ளன.

பித்தக்குழாய் அடைப்பால் ஏற்படும் மஞ்சள் காமாலையை எண்டோஸ்கோபி மூலமாகவோ அல்லது அறுவை சிகிச்சை மூலமாகவோ குணப்படுத்தலாம்.

பொதுவாக மஞ்சள் காமாலை என்றாலே மக்களுக்கு நாட்டு மருந்து மேல் ஒரு நாட்டம் ஏற்படுகிறது. இது ஒரு முற்றிலும் தவறான கருத்து.

ஏனெனில் மஞ்சள் காமாலை பல்வேறு காரணங்களால் ஏற்படுவதால். சரியான காரணம் கண்டறிந்து ஏற்ற சிகிச்சை அளிப்பதால் மட்டுமே பூரண குணமடைய முடியும். மேலும் மஞ்சள் காமாலை மற்றும் குடல் நோய் குறித்த உங்கள் சந்தேகங்களுக்கு கோவை கே.எம்.சி.எச் டாக்டர் எஸ்.அரவிந்த் *0422- 4323800, 4323396, 98841 13789*